


27. 07. 2026

தலைப்புச் செய்திகள்

- பொதுத்தேர்வில் முறைகேடுகளை தடுப்பதற்கான சட்டதிருத்த மசோதாவை மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று மக்களவையில் அறிமுகம் செய்தார்.
- காமன்வெல்த் விளையாட்டு போட்டியின் பளுதூக்கும் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற தூத்துக்குடியின் ராஜா முத்துப்பாண்டிக்கு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- தமிழகத்தில் கனிம வளத்துறை தொடர்பான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக்கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது..
- சென்னை மாவட்டத்தின் நீர்நிலைகளை தூர்வாரும் பணிகளை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் இன்று தொடங்கி வைத்தார்.
- தமிழகத்தின் வேளாண் நிதிநிலை குறித்து மாநில வேளாண் அமைச்சர் திரு. வினோத் தலைமையில் சென்னையில் கருத்து கேட்பு கூட்டம் இன்று நடைபெற்றது.

இனி விரிவான செய்திகள்

************

நாடாளுமன்றம்

நீட் விவகாரத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கரின் மீது காவல்துறையினர் நடத்தியதாக கூறப்படும் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற இருஅவைகளும் பிற்பகல் இரண்டு மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை நடத்த முற்பட்டபோது இப்பிரச்சனையை எதிர்கட்சியினர் எழுப்பினர்.

கேள்வி நேரத்தில் வேறு எந்த பிரச்சனைகளோ, விவாதங்களோ எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்று கூறிய அவைத்தலைவர், அவை சுமூகமாக நடைபெற, எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கோரினார்.

அவையின் மாண்புக்கு ஊறு விளைவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஆனால் எதிர்கட்சிகளின் அமளி தொடரவே அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது, அமளியின் ஊடே பொதுத்தேர்வு முறைகேடுகள் தடுப்பு ஒழுங்குமுறை சட்டதிருத்த மசோதா மக்களவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

பொதுத்தேர்வுகளில் முறைகேடுகளை தடுப்பதற்கான 2024-சட்ட திருத்தங்களுக்கு இது வகை செய்கிறது.

மத்திய ஊழியர் நலத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் அவையில் இதனை தாக்கல் செய்தார்.

இந்த மசோதாவை தாக்கல் செய்யும்போது எதிர்கட்சிகள் எழுந்து நின்று நீட் விவகார போராட்டத்தின்போது மாணாக்கருக்கு எதிரான காவல்துறையினரின் நடவடிக்கை குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரி அமளியில் ஈடுபட்டனர்.

அப்போது குறுக்கிட்ட அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா இந்த மசோதா மிகவும் முக்கியமானது என்றும் இதுகுறித்து விரிவான விவாதத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிப்பதன் மூலம் நாட்டின் தேர்வு முறை பிரச்சனைகள் குறித்து வலுவான நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

ஆனால் உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்தது.

அவை இன்று கூடியவுடன் ரசாயனம் மற்றும் உரத்துறை தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கை அவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அவைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், எதிர்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே பேச அனுமதி வழங்கினார்.

மாணாக்கர் மீது காவல்துறையினர் நடத்தியதாக கூறப்படும் தாக்குதல் தொடர்பாக அரசியல் சட்ட விதி 267-ன் கீழ் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரினார்.

இதனை தொடர்ந்து நிலவிய கூச்சல் குழப்பங்களால் அவை முதலில் 12 மணிவரையிலும் பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டன.

************

கிரண் ரிஜிஜூ

இதனிடையே நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ பொதுத்தேர்வு ஒழுங்குமுறை மசோதா தொடர்பான விவாதத்தை வேண்டுமென்றே எதிர்கட்சிகள் தடுப்பதாக குற்றம் சாட்டினார்.

வினாத்தாள் கசிவில் தொடர்புடையவர்களுக்கு கடும் தண்டனை வழங்குவது தொடர்பான முக்கியமான இம்மசோதா மீது விவாதத்தை தடுப்பது நாட்டிற்கும் மாணாக்கருக்கும் தவறான செய்திகளை கொண்டு செல்லும் என்று அவர் குறை கூறினார்.

மாணாக்கரின் உணர்வுகளை மதித்து எதிர்கட்சிகள் இந்த மசோதா குறித்து ஆக்கப்பூர்வமான விவாதத்தில் பங்கேற்க திரு.ரிஜிஜூ அழைப்பு விடுத்தார்.

************

உச்சநீதிமன்றம்

தேர்வுகளில் வினாத்தாள் கசிவு தொடர்பான பிரச்சனையில் மாணாக்கரின் போராட்டத்தின்போது அவர்கள் மீது காவல்துறை தாக்குதல் நடத்தியதாக கூறப்படுவது குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது நாளை விசாரணை மேற்கொள்ள உச்சநீதிமன்றம் இன்று ஒப்புக்கொண்டுள்ளது.

தலைமை நீதிபதி சூரியகாந்த், நீதிபதிகள் ஜாய்மல்யா பக்சி, மோகனா ஆகியோர் கொண்ட அமர்வு, இச்சம்பவத்தில் காவல்துறையினர் மீது நடத்தப்பட்டதாக கூறப்படும் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவர்களது குடும்பத்தினர் தாக்கல் செய்த மனுக்கள் மீதும், விசாரணை நடத்த ஒப்புக்கொண்டுள்ளது.

விதிகளுக்கு உட்பட்டு, அமைதியான போராட்டத்திற்கு அரசியல் சாசனத்தில் உரிய உரிமை உள்ளதாக தலைமை நீதிபதி சூரியகாந்த் அப்போது எடுத்துரைத்தார்.

நீட் விவகாரத்தில் தாக்கலான மற்றொரு மனு மீது விசாரணை மேற்கொண்ட உச்சநீதிமன்றம் மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள நந்தன் நிலேகானி உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளுக்கு பின்னர் இதுகுறித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தது.

************

காமன்வெல்த்

கிளாஸ்கோவில் நடைபெறும் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளின் ஆடவர் 65 கிலோ பளுதூக்கும் பிரிவில் தூத்துக்குடியை சேர்ந்த ராஜா முத்துப்பாண்டி வெள்ளிப்பதக்கம் வென்றதற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி, முதலமைச்சர் திரு.விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முத்துப்பாண்டியின் வெற்றி நாட்டிற்கு பெருமையை ஈட்டித்தந்திருப்பதாக பாராட்டியுள்ளனர்.

ராஜா முத்துப்பாண்டிக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதலமைச்சர் தமிழக அரசின் சார்பில் 30 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையை அறிவித்துள்ளார்.

************

ரிசர்வ் காவல் படை

மத்திய ரிசர்வ் காவல்படையினரின் நிறுவன நாளை ஒட்டி குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத்சிங் இன்று இப்படையினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்வதில், மத்திய ரிசர்வ் காவல் படையினரின் தன்னிகரற்ற வீரத்தையும், அளப்பரிய சேவையையும் பாராட்டியுள்ளனர்.

தீவிரவாதத்தை வேரோடு களைந்து நாட்டில் அமைதியையும், முன்னேற்றத்தையும், ஒருங்கே துணிச்சலுடன் நிலைநாட்டும் மத்திய ரிசர்வ் காவல் படையினரை போற்றுவதாகவும் கூறியுள்ளனர்.

************

ஏ.பி.ஜே அப்துல் கலாம்

முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் 11ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

அன்னாரின் நினைவிடம் அமைந்துள்ள ராமேஸ்வரம் பேக்கரும்பில் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

************

முதலமைச்சர் கனிமவளம்

தமிழகத்தில் கனிம வளத்துறை தொடர்பான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக்கூட்டம் முதலமைச்சர் திரு.விஜய் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது..

கனிமவள கொள்ளையை தடுத்து தமிழக அரசுக்கான வருவாயை பெருக்குவது, இத்துறையை மேம்படுத்துவது இத்துறை சார்பில் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

************

ஆனந்த்

சென்னை மாவட்டத்தின் நீர்நிலைகளை தூர்வாரும் பணிகளை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.ஆனந்த் இன்று தொடங்கிவைத்தார்.

இதன்படி கூவம் ஆற்றின் பாடிகுப்பம், நீரோட்ட பாதை முதல் - நேப்பியர் பாலம் வரையிலும்,

கூவம் வடக்கு பிரிவு ஆறு தூய்மை படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த தூர்வாரும் பணிகளால் பாடிகுப்பம், அமைந்தகரை, சூலைமேடு, சேத்துப்பட், எழும்பூர், சிந்தாதிரி பேட்டை பகுதிகளில் மழை மற்றும் வெள்ள நீர் தங்கு தடையின்றி செல்ல வழிகோலும் என அரசு தெரிவித்துள்ளது.

பருவமழை காலத்திற்கு முன்னரே அனைத்து தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க அமைச்சர் அறிவுறுத்தினார்.

************

வினோத்

தமிழகத்தின் வேளாண் நிதிநிலை குறித்து சென்னை கோட்டூர் புரத்தில் மாநில வேளாண் அமைச்சர் திரு.வினோத் தலைமையில் கருத்து கேட்பு கூட்டம் இன்று நடைபெற்றது.

உணவுத்துறை, கூட்டுறவுத்துறை உள்ளிட்ட 11 துறைகளை சேர்ந்த அமைச்சர்கள் இதில் பங்கேற்றனர்.

சட்டப்பேரவையில் வரும் 6ஆம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில் அதில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

************

கடலூர் - விழிப்புணர்வு

கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நாட்டுப்புற கலைஞர்களின் எயிட்ஸ் விழிப்புணர்வு தீவிர பிரச்சாரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில் குமார் இன்று தொடங்கிவைத்தார்.

பொதுமக்கள் HIV பரிசோதனை செய்வதற்கான QR Code வசதியையும் அவர் அறிமுகம் செய்து வைத்தார்.

இன்று தொடங்கி மூன்று நாட்களுக்கு புவனகிரி, சாத்திப்பட்டு, ஆலச்சிக்குடி, குறிஞ்சிப்பாடி, பன்ருட்டி, பரங்கிபேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் கூடும் இடங்களில் மாலை 4 மணிமுதல் இரவு 8 மணிவரை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் என்று அவர் கூறினார்.

************

நீலகிரி கல்லட்டி

நீலகிரி மாவட்டம் கல்லட்டி மலைபாதை வழியாக வெளிமாநில மற்றும் வெளி மாவட்ட சுற்றுலா பயணிகள் உதகைக்கு செல்ல இன்றுமுதல் தடை விதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இருப்பினும் உள்ளூர் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் இப்பாதையில் செல்ல எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை.

************

குறிஞ்சி மலர்

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் தற்போது நீலகிரி மாவட்டம் கூடலூரில் பூத்து குலுங்குவதை சுற்றுலா பயணிகளும் உள்ளூர் மக்களும் கண்டு களித்து வருகின்றனர்.

இதனிடையே வன விலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அப்பகுதிக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று வனத்துறை அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

கோவில்

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் ஆடி தபசு திருவிழா நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவை ஒட்டி கடந்த 12 நாட்களாக சுவாமி வீதி உலா விமரிசையாக நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது